17 NOV 1990 கண்டுக்குளி கிளை நூலகம்

Y.M.C.A வெளியீடு

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

எஸ். எம்.
பெர்னாண்டோ

எமது கிளை ஸ்தாபனம் எதுவும் வேறு எந்த இடத்திலும் இயங்கவில்லை என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்

580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகாமை)
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை ரூபா 3-50

S. M. Fernando
(Opticians)
எமது ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்திலேயே இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்
காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 12.30 வரை இயங்குகிறது.

கூடல் 5 பிரமோதூத ஆண்டு ஐப்பசி மீ 01 உ வியாழக்கிழமை (18-10-1990) ஹிஜ்ரி 1410 ர. அவ்வல் 28 UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 225

சீனச்சகடை, அவ்ரோ, பொம்மர், ஹெலி ஆகியவை குண்டு மழை பொழிய

பலாலி முகாமிலிருந்து படையினர் 4 முனைகளில் முன்னேற முயற்சி!

தெல்லிப்பளை ஆஸ்பத்திரி சகடைக் குண்டினால் சேதம்

"கராஜ்" தரைமட்டமானது

தெல்லிப்பளை, கட்டுவன், கும்பசிட்டி மயிலிட்டிப் பகுதிகளில் நேற்றுக் காலை 6-30 மணிமுதல் சீனச்சகடை விமானம் குண்டுகளை வீசிப் பெரும் தாக்குதல் நடத்தியது.

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு முன்புறமாக - மிகச் சமீபமாக-குண்டு வீசப்பட்டது. இதனால் ஆஸ்பத்திரியின் பல பகுதிகள் சேதமடைந்தன. ஆஸ்பத்திரியின் கூரைகள், ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

சத்திரசிகிச்சைப் பிரிவு, 1ஆம், 2ஆம் வார்ட்டுகள், எக்ஸ்ரே பகுதி, பிரேதஅறை போன்ற பகுதிகளும் குறிப்பிடத்தக்கஅளவு சேதமடைந்தன.

குண்டு விழுந்த இடத்தில் இருந்த ஒரு 'கராஜ்' தரைமட்டமானது. கு. அருளானந்தம் (வயது 33) என்பவர் படுகாயமடைந்தார். (ஒ-ரி-68-3-5)

பலாலி ஷெல் வீச்சுக்கு ஒருவர் பலி; 3 பேர் காயம்

யாழ்ப்பாணம், அக். 18

பலாலியில் நேற்றுக் காலை இடம் பெற்ற ஷெல் தாக்குதலில் ஒருவர் பலியானார். மூவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஒருவரே உயிரிழந்தார். இவர் கோப்பாய்ப் பகுதியைச்சேர்ந்தவர் என அறியவருகிறது. எனினும் சரியான விபரங்கள் தெரியவில்லை.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

கோண்டாவிலைச் சேர்ந்த மாணிக்கம் தங்கராசா [வயது 37], நாவற்குழியைச் சேர்ந்த சிவலிங்கம் வசாந்தன் [வயது 19] ஆகியோர் காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கும்பளையைச் சேர்ந்த க. தயாளகாந்தன் [வயது 25] என்பவரும் இச் சம்பவத்தில் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

ஏழாலை, குப்பிளான் நோக்கி பலாலியிலிருந்து ஷெல்!

பலாலி முகாமில் இருந்து நேற்று ஏழாலை, குப்பிளான் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர்.

ஷெல் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்றதால், அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பீதியால் வெளியேற தொடங்கினர்.

வெளியேறியவர்கள் இணுவில், சுன்னாகம் பகுதிகளை நோக்கி வந்தவண்ணம் இருந்தனர். [ஒ-3-5]

புகையைக் கக்கியபடி மறைந்த "அவ்ரோ"

யாழ்ப்பாணம், அக். 18

பலாலி விமான நிலையத்தின் சுற்றாடல் பகுதியில் நேற்று பிற்பகல் 3 30 மணியளவில் குண்டுகளை வீசிக் கொண்டிருந்த இரண்டு அவ்ரோ விமானங்களில்ஒன்று புகை கக்கிக்கொண்டு மறைந்தது.

நேற்றுக்காலையில் இருந்து மூன்று தடவைகளாக - 25க்கு மேற்பட்ட குண்டுகளை - வயாவிளான், கும்பசிட்டி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஹெலி கண்டபடி தாக்கு; தெல்லிப்பளைப் பகுதியில்!

தெல்லிப்பளை, அக்.18

தெல்லிப்பளைப் பகுதியில் நேற்று மாலை 4 30மணிக்குப் பின்னர் சுமார் ஒரு மணித்தியாலம் இரு ஹெலிகள் கண்டபடி தாக்குதல்களை நடத்தின.

வீதிகளில் நடமாட்டத்தைக் கண்டவுடன் ஹெலி தொடுத்தோடி தாக்குதலை மேற்கொண்டது.

சுமார் 5 மணியளவில் தெல்லிப்பளை தபால் நிலையத்துக்குச் சமீபமாக ஹெலியில் இருந்து அடுத்தடுத்து 4 கிரனேட்டுகள் வீசப்பட்டன. இதனால் அப்பகுதியில் கடைகள், கட்டடங்கள் சில சேதமடைந்தன.

இதேவேளை—

குடாநாட்டிலும், கிளிநொச்சிமாவட்டத்திலும் நேற்றுக் காலை முதல் காலவரையறையின்றி ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-3-5)

மூன்று பக்கங்களில் முறியடிப்பு வயாவிளானில் தொடர்ந்து மோதல்

— தெல்லிப்பளையிலிருந்து:- ஜீ. குகநாதன், கே. குமாரதாஸன் —

தெல்லிப்பளை, அக். 18

பலாலி முகாமைச் சூழவுள்ள பகுதிகள் மீது, நேற்றுக் காலை முதல் சீனச் சகடை, 'அவ்ரோ' விமானங்கள், பொம்மர்கள், ஹெலிக் கொப்டர்கள் ஆகியவை குண்டு மழை பொழிய-

முகாமின் நான்கு முனைகள் ஊடாக படும் தாக்குதல் நடத்திய வாறு இராணுவத்தினர் முன்னேற முயற்சி எடுத்தனர்.

பதில் தாக்குதல் நடத்திய விடுதலைப் புலிகள் மூன்று முனைகளில் இராணுவத்தினரின் முயற்சியை முறியடித்து அவர்களைப் பின்வாங்கச் செய்தனர்.

நான்காவது முனையான வயாவிளானில், படையினரை முன்னேறவிடாது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடத்தி வருவதாகவும்- அங்கு தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக் காலை 5.30 மணிக்கு வயாவிளான் குரும்பசிட்டி, கட்டுவன், மயிலிட்டி கிராமதீர்மன்றம் ஆகிய பகுதிகள் ஊடாக படையினர் வெளியேற முயற்சித்ததை அடுத்து அப்பகுதிகளில் கடும் மோதல் ஆரம்பமானது.

நேற்று நண்பகல் வரை இடம்பெற்ற இந்த மோதல்

[4 ஆம் பக்கம் பார்க்க)

வலி. வடக்கில் நேற்று முழுவதும் அகோர விமானக் குண்டு வீச்சு!

காங்கேசன்துறை, அக். 18

—காங்கேசன்துறை செய்தியாளர்;- எஸ். ஆர், ஞானசுந்தரம்—

வலி. வடக்கில் நேற்றும் பரவலாக இடைவிடாது விமானத் தாக்குதல்கள் மிக அகோரமாக இடம்பெற்றன.

அதிகாலை 6 30 மணிக்கு பலாலியில் இருந்து புறப்பட்ட இராட்சத சீனச் "சகடை" விமானம் கட்டுவன், மயிலிட்டி பகுதிகளிலும், தெல்லிப்பளை பகுதியிலும் குண்டுகளை வீசியது.

கட்டுவன், குரும்பசிட்டி பகுதிகளில் விழுந்த குண்டுகளால் பல வீடுகள் சேதமுற்றன.

பின்னர் காலை 8 மணியளவில் இரு பொம்மர்கள் பலாலி இராணுவ முகாம் கற்றாடல் பகுதியில் குண்டுகளை பொழிந்து தள்ளின.

காலை 9 மணியளவில் வலி. வடக்குப் பகுதியில் "ஒபிளேன்" ஒன்று ரோந்து சுற்றி வந்தது.

காலை 11 மணியளவிலும் இரு பொம்மர்கள் பலாலி இராணுவ முகாம் கற்றாடலில் தாக்குதலை நடத்தின.

பின்னர் 1.30 மணியளவில் இரு அவ்ரோ விமானங்கள் பலாலி இராணுவ முகாமின் மேற்குப்புறத்திலுள்ள கிராமங்களான கட்டுவன், தையிட்டி, மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் இலக்கு ஏதுமின்றி குண்டுகளை வீசின.

இதனால் அப்பகுதிகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

இரு ஹெலிகள் வலி. வடக்கிலும், ஏனைய பகுதிகளிலும் இடைவிடாது தாக்குதல் நடத்தியவண்ணமே இருந்தன.

வீதியால் சென்ற வாகனங்களை துரத்திச்சென்றும் தாக்குதல் நடத்தின.

நேற்று மாலை 5 மணியளவிலும் அவ்ரோ விமானமும், இரண்டு பொம்மர்களும் குரும்பசிட்டி, வயாவிளான் பகுதிகளில் தாக்குதல் நடத்தின. (ஒ-3-5-68 15)

விமான குண்டு அதிர்வினால் மரத்திலிருந்து வீழ்ந்தவர்

திடீரென இடம்பெற்ற பொம்மர் தாக்குதலைக் காண்ணுற்ற சீவல் தொழிலாளிஒருவர் அதிர்ச்சியுற்று மரத்திலிருந்து கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

இளவாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இச் சம்பவம் இடம்பெற்றது.

இளவாலை கிரிமலைப் பகுதிகளின் மீது மாலை 5 30 மணியளவில் திடீரென வந்த பொம்மர்கள் சுமார் ஒரு மணிநேரம் தொடர்ந்து தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதலினால் கிரிமலைச் சிவன்கோவில் தேர் சின்னாபின்னமானது கோயிலும் கோயில் பூசகரின் துவிடும் பலத்த சேதமடைந்தன.

இந்தத் திடீர் தாக்குதல் சம்பவத்தின்போதே மரத்திலிருந்த சீவல் தொழிலாளி பிலிப் வியாகுலம் (வயது 35) என்பவர் அதிர்ச்சியடைந்து கீழேவிழுந்து படுகாயமடைந்தார். இவர் தற்போது ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-15)

21 லொறிகளில் உணவுப் பொருள் கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்டது

யாழ்ப்பாணம், அக். 18

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 21 லொறிகள் நேற்றுக் கொழும்பில் இருந்து புறப்பட்டன.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் திரு. சரித்த ரத்னாவுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து வாரா வாரம் உணவுப் பொருள்களை லொறிகள் மூலம் அனுப்ப ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

இதனடிப்படையில் ஒரு தொகுதி லொறிகள் நேற்றுப் புறப்பட்டன.

இதே சமயம் — கொழும்பில் இருந்து மண் எண்ணெய் எடுத்து வர ப. நோ. கூ. சங்கங்களின் மூன்று லொறிகளும் அங்கு சென்றுள்ளன. [உ-3]

நேற்று முழுவதும் ஹெலிகள் 'தீபாவளி வேட்டு'க்கள்!

உரும்பராய், அக். 18

தீபாவளி தினமான நேற்று காலையிலேயே ஹெலிகள் வலிகாமம் முதல் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வேட்டுக்களைப் பொழியத் தொடங்கின.

வலிகாமம் பகுதியில் மூர்க்கமான தாக்குதலில் ஈடுபட்ட ஹெலிகள், இடையிடையே ஏனைய பல பகுதிகளுக்கும் சென்று அட்டகாசம் புரிந்தன.

உரும்பராய்ப் பகுதியில் காலை சுமார் 9 மணிக்கு ஹெலித் தாக்குதல் நடத்தது. இதனால் உரும்பராய்ச் சந்தியிலுள்ள சனசமூக நிலையம் சேதமடைந்தது.

அங்கு பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்து நான்கு பேர் சிறு காயங்களுக்கு ஆளானார்.

ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, கோப்பாய், நீர்வேலி, நல்லூர், அராலை தபாற்கடைச் சந்தி உட்பட பல பகுதிகளிலும் ஹெலிகள் பரவலாகத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இந்தப் பகுதிகளில் பெருமளவான வீடுகள் சேதமுற்றன. அனேகர் சிறு காயங்களுக்குள்ளாகினர். [ஒ-ரி-69]

இரத்தம்! தேவை!!

மானிப்பாய் ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு அவசர உதவியாக இரத்தம் தேவைப்படுகிறது. மனிதாபிமான அடிப்படையில் இரத்ததானம் வழங்குமாறு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் பொதுமக்களை கேட்டுள்ளன.

தற்போது ஊரடங்கு சட்டம் அமுலில் இருப்பதால் இரத்ததானம் செய்ய விரும்புவோர்கள் செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டால் அவர்களைச் செஞ்சிலுவை வாகனம் மூலம் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-5]

2 ஆம் தர அதிபர் பதவிக்கு தெரிவானோர் பட்டியல் 3ஆம் பக்கத்தில்

கோதீவு- சங்குப்பிட்டி வீதியில் போக்குவரத்தை அனுமதிக்குக!

அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 18

கோதீவு - சங்குப்பிட்டி "பாதை"யூடாக மரத்துவதற்கும் அதனூடாக போக்குவரத்தை ஆரம்பிக்கவும் அனுமதி வழங்குமாறு கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தைக் கோரியுள்ளார்.

கோதீவு - சங்குப்பிட்டிக்கு இடைப்பட்ட கடற்பகுதியைக் கடந்து செல்லப் பாவிக்கப்படும் "பாதை", விமானக் குண்டுவீச்சினால் சேதமடைந்துள்ளது என்பதும் -

கோதீவு- சங்குப்பிட்டி வீதியைப் பாவிப்பதற்குத் தடை விதித்து பாதுகாப்புப் படையினர் ஹெலி மூலம் துண்டுப் பிரசுரங்களை வீசியுள்ளதாகவும் என்பதும் தெரிந்தவையே. (ஒ 3)

வெளியூர் செல்லும் தமிழர் வவுனியாவில் பெரும்பாடு!

யாழ்ப்பாணம், அக். 18

வவுனியாவுக்கு அப்பால் வெளியிடங்களுக்கு பஸ் மூலம் செல்ல தமிழர்களுக்குத் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

பூந்தோட்டத்தை அடையும் தமிழர்கள் லொறி மூலம் கொண்டுசெல்லப்பட்டு அகதி முகாமில் விடப்படுகிறார்கள்.

அங்கு சோதனை முடிந்த பின்னர் படையினரின் வாகனங்களிலேயே அரசின் ரயில் நிலையத்திற்கு ஏற்றிச் செல்லப்படுகிறார்கள்.

இதே வேளை—

அகதி முகாமில் இருந்து (4 ஆம் பக்கம் பார்க்க)

★ ஆரவாரம் இல்லாத தீபாவளி!

யாழ்ப்பாணம் அக் 18

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீபாவளித் தினம் ஆரவாரம் இன்றி அமைதி இல்லாமல் அடக்கமாகக் கொண்டாடப்பட்டது.

பட்டாசு, வெடிகளை, டாம்பீகம் இல்லாமல் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்ததோடு பலரும் தீபாவளி நாளைக் கழித்தார்கள்.

விருந்து, உபசாரம், குதூகலம் இல்லாமலேயே இவ்வருடத் தீபாவளி அமைந்திருந்தது (ஒ 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையினரை ஈர்த்து வரும் இன்றைய நாளிதழ்

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

முதலாம்பிள்ளை

துலாபம் நேர்கையில் பிரித்து மகிழ அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய இரு நூல்கள். செட்டிக்காரர் ரூ 25/ முதலாம்பிள்ளை 30/- நடைச்சுவை நிறைந்த 10 வானொலி நாடகங்கள். புவனாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (14472)

பரிஸ் ரெக்ஸ்

105, அரசடி வீதி, தட்டாதெரு, பிரவுண் வீதி, சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (14446)

TOEFL

கலாநிதி போட்டரினால் நடாத்தப்படும் வார இறுதி பயிற்சி வகுப்புக்கள் 30 - 10 - 90 அன்று ஆரம்பமாகும். சில வெற்றிடங்களே உண்டு. தொடர்பு: இவ்வின் ஓர்க்கினம் நிறுவனம். டயஸ் வீதி, (பல்கலைக்கழக முன்னால்) திருநெல்வேலி. (14466)

ரதி வோச் வேக்ஸ்

(Rathy Watch Works)

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைக்காக நந்த மணிக்கூடு வகைகளை இல. 12, பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் பெற்றுக் கொள்ளவும் திருத்துதல் வேலைகளும் நடைபெறுகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (யாழ் நகரிலமணிக் கூடுகள் திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்) (14401)

TYPEWRITERS

நட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo. Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில் (ஒ-5219)

போட்டோஸ்ரற்

தரமாக எந்த அளவிலும் உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் முன் பக்கம், மக்மிலன புத்தக சாலை, ஓட்டுமடம். (ஒ/5314)

University of Jaffna,
Faculty of Agriculture, Kilinochchi

Applications will be received by me from suitable candidates for the following posts upto *1990-10-29*

Temp Instructor in English
Visting Lecturer in Mathematics

Temp. Lecturer / Visiting Lecturer / Demonstrator in Agronomy/Agricultural Chemistry /Agricultural Economics / Agricultural Biology / Animal Science / Agricultural Engineering.

Salary Scale:

1. Temp Instructor in English: Rs: *3,000/-* (Fixed) p. m.
2. Temp. Lecturers: Rs: *3,900/-* p m *(Fixed)*
3. Visiting Lecturers: Rs: *100/-* per hour + Travelling allowance
4. Temp Demonstrator: *3 250/-* p m. (Fixed)

Qualifications

1. Instructor:

(1) (i) A degree of a recognised University: OR
(ii) the First Class Trained Teachers' Certificate with at least *3* years' experience after training; OR
(iii) the Specialist English Trained Teachers, Certificate with at least *3* years' experience after training; OR
(iv) the Diploma or Certificate in the Teaching of English as a Second Language from the University of Colombo or an equivalent qualification obtained from a recognised University or other Institution after having satisfactorily completed a course of study of not less than ten months' duration.

AND

(2) A very good command of Sinhala / Tamil and English

2. Temp. Lecturer

(1) (i) A First or Second Class (Upper Division) in a special Degree in a relevant subject; OR
(ii) A Second Class (Lower Division) in a Special Degree in a relevant subject; OR
(iii) Such professional qualifications as may be approved by the University Grants Commission upon the recommendation of the Higher Educational Institution concerned

3. Temporary Demonstrator

A graduate or a person awaiting results of a Final Degree Examination

Note:

Those who are sitting for a final examination in this year also can apply.

Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for the interview scheduled to be held on *1990-10 31* at *10.00* a m in the Board Room of this University.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely, Jaffna.
1990 10 15. [C-5313]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
12 - 04 - 1934

மறைவு:
18 - 09 - 1990

அமரர் எஸ். கே. செல்லையா
அவர்கள்

(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, கிளிநொச்சி)

திதி:- 18 — 10 — 1990

எங்கள் குடும்ப விளக்கு, எங்கள் வாழ்வின் ஒளி காட்டி அமரர் திரு எஸ். கே. செல்லையா அவர்கள் எங்களை மீளாத்துயரில் ஆழ்த்தி மறைந்த 31ஆம் நாளான இன்று காலையில் எங்கள் இல்லத்தில் அன்னாரின் ஆதிம சாந்திக்காக அந்தியேட்டியும் சபிண்டீகரணமும் நடைபெறும்.

அத்தருணம் உற்றார் உறவினர், நண்பர்கள் தவறாது சமுகந் தந்து சிறப்பிக்கும் வண்ணமும் அன்று மதிய போசனத்தில் கலந்து கொள்ளும் வண்ணமும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்:
மனைவி, மக்கள்.

பண்டித்தறை.
நெல்லியடி, கரவெட்டி. [14478]

6ஆம் மாத நினைவஞ்சலி

திரு சரவணமுத்து தங்கராசா
பிரபல வர்த்தகர் – ஜயர் கடை உரிமையாளர் – கொழும்புத்துறை)

மலர்வு:-
18 - 07 - 1940

உதிர்வு:-
24 - 04 - 1990

அரையாண்டு சென்றதையா
எமதிதயம் இருண்டதையா
உமை நினைக்கும் போதினிலே
எமதுள்ளம் துடிக்குதையா
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி
விட்டு நீர் மட்டும் மீளாத்துயில்
கொள்ளச் சென்ற தெங்கே – இவ்
உலகில் வைக்க இயலாமல் உள்ளத்தில்
வைத்து உருகுகிறோம்.

அன்பு மனைவி, மக்கள்.

இல. 92, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (14251)

---

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

படைப்பு:-
14 - 12 - 1946

அழிப்பு –
22 - 10 - 1987

திதி:
18 - 10 - 1990

திரு: சு. சிவபாலசிங்கம் (பாங்கர்)
மக்கள் வங்கி

அன்பே உருவான அப்பா. ஆண்டுகள் மூன்றாக தம்பிமாரோடு தங்கையர் இருவருமாய் தேடுகின்றோம்— பல நாள் நீங்கள் இல்லை அப்பா— உங்களைப்போன்றோரைக் கண்டோம். கதிகலங்கி ஓடோடிப் பக்கத்தே சென்றால்— அது நீங்கள் இல்லை அப்பா. வளர்ந்துவிட்ட எங்களுக்கு ஒரு துணை இல்லை என்று பயந்து கொண்டே இருக்கின்றா அம்மாவும்— வந்து பாருங்கள்— துணையாக வாருங்கள் அப்பா.

உங்கள் பிரிவால் வாடும்.

'கலையகம்' [illegible]
வேலணை. மக்கள், மருமக்கள்,
(14484) [illegible], லண்டன், கனடா

வைத்தியர் அலுவலகம்

நவாலி, அக் 18 கட்டுடையில் இயங்கி வந்த சங்காலை கால் நடை வைத்தியர் அலுவலகம் தற்பொழுது சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபரின் இருப்பிடத்தில் இயங்கி வருகின்றது. (இ-100)

திறந்தநிலையில் தபால்பெட்டி

நாவாலி, அக். 18 ஆனைக்கோட்டைச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள தபால் பெட்டி நீண்டகாலமாக திறந்த நிலையில் உள்ளது. (இ 100)

சம்பளம் இல்லை

கொக்குவில், அக் 18 யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை இதனால் இந்த ஊழியர்கள் பலத்த கஷ்டத்துடன் காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது. (ஒ-69)

சுவர்விழுந்து கால் முறிந்தது

யாழ்ப்பாணம், அக். 18 ஷெல் வெடித்த அதிர்வினால் சுவர் விழுந்தது. அந்தச் சுவரினுள் அகப்பட்ட சிறுவன் ஒருவன் கால் முறிந்த நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான்.

காங்கேசன்துறை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் சடந்தவியாழக்கிழமை கொல்லங்குலட்டியில்-புதிதாகக் கட்டப்பட்டு முற்றுப்பெறாமலிருந்த வீடு ஒன்றின்-அருகில் விழுந்து வெடித்தது.

அச்சமயம் பாலசுப்பிரமணியம் ஜெயசுந்தரராசா (வயது 15) என்ற அந்தச் சிறுவன் சுவருக்குள் அகப்பட்டுக் கொண்டான். (ஒ-15

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி நாகரத்தினம் ஐயாத்துரை

தோற்றம்:
20 - 08 - 1913

மறைவு:
19 - 09 - 1990

திதி:
19 — 10 — 1990

பொங்கும் நினைவுகள் எங்களை வாட்டுதே
எங்கு சென்றினி ஆறுதல் தேடுவோம்?
நீங்கள் மாறிப் பல்லாண்டுகள் ஆகினும்
எங்கள் நெஞ்சினில் என்றும் உள்ளீர்

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பலவழிகளிலும் உதவி நல்கிய உறவினர், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் 19 - 10 - 90 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் வீட்டுக் கிரித்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

சகோதரி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

விரபத்திரர் கோவில் ஒழுங்கை,
கல்வியன் காடு. [14485]

தவிட்டு மூடையில் பட்டரி

கொழும்பு, அக் 17 கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தவிடு ஏற்றி வந்த ஒரு லொறியில் இருந்து டோர்ச்லைற் பட்டரிகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைப்பற்றியதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

வவுனியா தடை முகாமில் வைத்து லொறியை இராணுவத்தினர் மறித்துச் சோதனை செய்ததாகவும்-

அச்சமயம் லொறியில் இருந்த தவிட்டு மூட்டைகளிலொன்றினுள் டோர்ச்லைற் பட்டரிகள் புதைத்து வைத்து இருக்கக் காணப்பட்டது என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது (உ-எ)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்

தர்மபாலன் புருஷோத்

மலர்வு,
04 - 10 - 1986

உதிர்வு:
18 - 10 - 1987

திதி: 12 - 11 - 1990

மூன்றாண்டு சென்றதடா! என்வாழ்வு இருண்டதடா
என்னுள்ளம் துடிக்குதடா!
உன் அழகுத் திருமுகமும் பட்டுக் கன்னமதில்
குழிவிழும் புதுவழகுப் புன்னகையும்
தத்திக் தளிர் நடையும் – தினமும்
என் முன்னே தெரியுதடா!
என்னை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட
என் அன்புச் செல்வமே! புருஷோத்!
உன் ஆத்மா சாந்தியடைய தினமும்
கண்ணீரால் அர்ச்சிக்கின்றேன்.

அப்பா, உற்றார், உறவினர்.

புங்குடுதீவு 8. (14228)

---

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்:
06 - 08 - 1920

விண்ணில்:
22 - 10 - 1987

திதி:
18 — 10 — 1990

அமரர் கந்தையா அரியரட்ணம்

அப்பா! இமைப் பொழுதிலும் எம் நெஞ்சில் நீங்காது நீங்கள் விட்டுச் சென்ற ஆண்டுகள் யுகங்களாகின்றன.
எங்களுடனான நிகழ்வுகள் நிழல்களாகி எம்மைத் தொடர்கின்றன.
அன்புடன் எம்முடன் பழகிய இனிய குரல் எதிரொலியாகி எம் காதுகளில் ஒலித்த வண்ணம் இருக்கின்றன.
இமைப்பிலும், விழிப்பினும் அப்பா! உங்கள் அன்பு முகம் அளிக்கின்றது ஆறுதல்
அன்று எம்மிடமிருந்து உங்களைப் பிரித்த அவலவர் படித்தனர் பாடம், இன்று எம்மை அழித்து மனக் கண்ணிலிருந்தும் பிரிக்க
நினைக்கும் கண்கடையற்ற எம்மவர் உங்களின் அன்பும், ஆசியும் கற்றி நிற்கும் வரை எம்மை ஒன்றும் செய்யா.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக!

பிரிவுத்துயரின்றும் விடுபடாது ஏங்கி நிற்கும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். [14432]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

உரத் தடை

வடபகுதிக்கு உரவகைகளைக் கொண்டுவருவதற்கு கூட்டுப் படை கலைமை அலுவலகம் தடைவிதித்துள்ளது.

ஒரு பக்கத்தில் இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்தும் மறுபக்கத்தில் தமிழர்களின் பொருளாதார, கல்விக்கட்டமைப்புகளை உடைத்துக் குலைத்தும் அவர்களின் உரிமைப் போராட்டத்தை மலினப் படுத்த வேண்டும் — இந்த அழகான, நீண்ட காலத் திட்டத்தை சிறீலங்கா அரசாங்கம் வெகு நாகக்காக் செயற்படுத்தி வருகிறது.

ஒரு நாட்டை அல்லது பிரதேசத்தை அல்குவாழும் மக்களை அடிமைப்படுத்தி, அடக்கி ஆளவேண்டும் என்றால், அப்பகுதியின் பொருளாதாரத்தையும், கல்வியையும் அடித்து நொருக்கிவிட்டால்போதும் என்ற கோட்பாட்டை வரிக்குவரி, எழுத்துக்கு எழுத்து ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தி வருவதை நாம் கண்ணாரக் காண்கிறோம்: செய்யாரு அலுபவிக்கிறோம்.

பாடசாலைகள்மீது அரசு விமானத் தாக்குதல் நடத்தி, மாணவரைப் பயமுறுத்தி, அவர்களின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கி, கல்வியைச் குலைப்பதைப் பார்க்கிறோம் எரிபொருள் மற்றும் பொருள்களுக்குத் தடைவிதித்து விவசாயத்தையும் ஏனைய தொழில் வளங்களையும் பாழாக்குவதையும் பார்க்கிறோம்.

அந்த ஆழமான, மோசமான கொடிய திட்டத்தின் ஓர் அம்சம்தான் உரத்தடை தாங்கள் சொல்வதைச் சரியாக்குவதற்காக வடபகுதி மண்ணைச் சோதித்து வழமையான உரங்களைத் தவிர்த்து, புதிய உரவகைகளை அனுப்பப்போவதாகச் சொல்லியும் விடுகிறது அரசு!

சுதந்திரம் வேண்டும் என்று நினைத்த காலத்தில் இருந்தே தமிழர்கள் தங்கள் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பத் தொடங்கி இருக்க வேண்டும் சுயபொருளாதார பலத்தைப் பெற்றுச் சொந்தக்காலில் நிற்கும் நிலையை எய்தியிருக்க வேண்டும் அது குறித்து 1958 ஆம் ஆண்டேக்ஸ்பின்னர், எழுத்திலும் பேச்சிலும் பெரிதாகக் கூறப்பட்டது.

ஆனால் நடைமுறையில்.....அறுவடையாய் ... எதுவும் இல்லை. கொழும்பிலிருந்து ரயிலும், லொறியும் வரவில்லையானால் வடபகுதி மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் அவலத்தைக் கடந்த நான்கு மாதங்களாகக் காண்கிறோம்.

அரசு எந்தவகையான கூடையைக் கொண்டு வந்தாலும் தாக்குப் பிடித்து உரிமைப் போராட்டத்தைத் தொடர்வோம் என்று செயலில் காட்ட வேண்டும் அதுவே தமிழர்களின் உரிமைப் போரை பிறநாடுகள் அங்கீகாரம் செய்வதற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவும் அமையும்.

உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு வந்தவுடன் பயிர் உற்பத்தியில் ஈடுபட வேண்டும் என மக்கள் தூண்டப்பட்டார்கள். அதனால் சிறு பலனும் கிடைத்தது. ஆனால் லொறிகள் வரத் தொடங்கியதும் உணவு உற்பத்தியில் இருந்த ஈடுபாடும், வேகமும் தொப்பென வீழ்ந்து போனது கவலைக்குரியது.

உணவுப் பொருள் வந்தாலும் உற்பத்தி தொடர வேண்டும். விவசாயத்துக்குத் தேவையான உரவகைகளை இங்கேயே உற்பத்தி செய்யவேண்டும் இயற்கை உரங்களை ஊட்டி மண்ணுக்குமேலும் வளம்சேர்க்க வேண்டும்.

அதே போல ஏனைய துறைகளிலும் பொருளாதார அத்திவாரத்தை இனியாவது உறுதியாகப் போட வேண்டும். அரசியல் விடுதலைக்கு சுயபொருளாதார பலம்முதுகெலும்பு என்பதை மறந்துவிடலாகாது.அதுவே ஈழத்தமிழரின் விடிவுக்கு ஒளி காட்டும்.

அவசிய சேவைகளுக்கு டீசல்: கப்பல் மூலம் தருவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், அக். 18
யாழ் – மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகளை சீராக்க கப்பல் மூலம் டீசல் கொண்டு வரப்படவிருக்கிறது.

யாழ் – அரச அதிபர் திரு. அன்ரன் அம்பிரட் இத்தகவலைத் தெரிவித்தார்.

வ. பி. போ. ச. பஸ் சேவையைச் சீராக்கவும், விவசாய முயற்சியை மேற்கொள்ளவும், வைத்தியசாலைகள் இயங்குவதற்கும் வாரம் ஒன்றுக்கு எவ்வளவு டீசல் தேவை எனக் கொழும்பிலிருந்து கேட்கப்பட்டிருக்கிறது.

அந்த விவரங்கள் அனுப்பப்பட்டதும் அந்த அளவுக்கு ஏற்றவாறு கப்பலில் டீசல் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார் [உ-3]

அதேவேளை- அத்தியாவசிய சேவைகளுக்கு தேவையான டீசல் அளவின் புள்ளி விவரங்களை பெற்றோலியக் கூட்டுத் தாபன வடபிராந்தியக்கிளை திரட்டிவருகிறது

பிராந்திய முகாமையாளர் இந்தப் புள்ளி விவரங்களை கொழும்பு பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்தலை வரிடம் சமர்ப்பிக்க இந்தவார இறுதியில் கொழும்பு செல்கிறார்.

டீசல் கப்பல்மூலம்கொண்டு வரப்பட்டு, பைப் மூலம் பவுசர்களுக்கு நிரப்பவே முயற்சி எடுக்கப்படுகிறது (இ - 9]

மண்டைதீவுப் பகுதியில் திருடர்கள் கைவரிசை!

மண்டைதீவு, அக். 18
மண்டைதீவுப் பகுதியில் சைக்கிள்கள், பெறுமதியான பொருட்கள், தளபாடங்கள் மற்றும் குசினிப்பொருள்கள் போன்றவற்றை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

மண்டைதீவை விட்டு இராணுவத்தினர் சென்ற கையோடு திருடர்கள் உடனடியாக கைவிடப்பட்டுக் கிடக்க வீடுகளில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்என்பது இப்போதுதெரியவந்துள்ளது.

இந்தப் பகுதியில் திருடப்பட்ட சைக்கிள்கள் மற்றும் பொருள்களில் அனேகமானவை வெளியிடத்துக்கு கடத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இப்பகுதிக்குத் திரும்பிச் சென்ற மக்கள் நடந்தவற்றை பார்த்து ' அவர்கள் தான் அப்படி என்றால் எங்களின்ரை சொந்தச் சனங்களும் மரத்தால் விழுந்த வலை மாடேறி மிதித்தது போல உந்த வேலையைச் செய்யினம்'' என்றுபெரும் வேதனையுடன் தெரிவித்தனர். (ஒ - 88)

தேவாலயம் மீது ஹெலித் தாக்கு!

தென்மராட்சி, அக். 18
கடந்த சனியன்று பிற்பகல் கொழும்பு புனித யாகப்பர் தேவாலயத்தில் உள்ள அகதி முகாமில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சிறுவர்கள் ஓட்சென்று பதுங்கு குழிக்குள் மறைந்து கொண்டதால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது

ஆனால் தேவாலய கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளானது. (உ-117)

பயணிகளை ஏற்றிச் செல்லும் 'சைக்கிள் இளைஞர்கள்'

யாழ்ப்பாணம். அக். 18
யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் வந்திறங்கும் பயணிகளை அவர்களது சொந்த இடங்களில்சேர்ப்பிக்க'' சைக்கிள் இளைஞர்கள்'' முத்திரைச் சந்தியில காத்திருக்கிறார்கள்.

பஸ்கள், லொறிகள் மூலம் முத்திரைச் சந்திக்கு வந்து சேரும் பயணிகளை அவர்களது வீடுகளுக்கு சைக்கிளில் ஏற்றிச் சென்று விடுவதற்கு தயாராக இளைஞர்கள் முத்திரைச் சந்தியில் காத்து நிற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரிக்கு சைக்கிளில் ஏறிலர் தாம் 50 ரூபா கட்டணமாகக் செலுத்தியதாக ஒருவர் தெரிவித்தார். (இ - 3 -5)

சடலமுள்ள கிணறுகளை மூட பணிப்பு

அனலைதீவு, அக் 18
மண்டைதீவுப் பகுதியிலுள்ள கிணறுகளில் சடலங்கள் காணப்பட்டால், அக் கிணறுகளை மூடிவிடுமாறு சுகதாரப் பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்ப்

அண்மைக்காலத்தில் இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கையின் போர் பலர் கொல்லப்பட்டனர். என்பதும்-

அவர்களது சடலங்கள் கிணறுகளில் போடப்பட்டன என்பதும் தெரிந்ததே

இந்தச் சடலங்கள் கிணறுகளில் அழுகிய நிலையில் காணப்படுகின்றன.

இதனால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து இருப்பதால் அந்தக் கிணறுகளை உடனடியாக மூடிவிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை- மண்டைதீவுப் பகுதியில் மலத்தியன் மற்றும் குளோறின் போன்றவற்றை தெளிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது (ஒ - 18)

முல்லைத்தீவு வந்த கப்பலில் 360 மெற்றிக் தொன் உணவு

முல்லைத்தீவு, அக். 18
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு அங்கு ''விங்கோ றேடர்ஸ்'' என்ற கப்பல் வந்துள்ளது

கடந்த சனிக்கிழமை வந்தடைந்த மேற்படி கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்றுடன் முடிவடையும்என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தக் கப்பலில் அரிசி,சீனி, பருப்பு, மல்லி உட்பட 360 மெற்றிக்தொன் உணவுப் பொருள்சள் வந்திருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே பொன்னம்பலம் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-6)

கந்தசஷ்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக் 18
இந்துக்களின் புனித தினங்களில் ஒன்றாகிய ''கந்தசஷ்டி விரதம்., நாளை ஆரம்பமாகிறது.

பூலோக மக்களுக்கும், தேவர்களுக்கும் துன்பம் செய்து வந்த அசுரனை ஒழித்த முருகப்பெருமானின் அரும் பெரும் செயலை நினைவு கூரு முகமாக, நாளை முதல் 6 நாட்கள் இந்துக்கள் விரதமிருந்து முருகனை வழிபடுவார்கள் (இ-6)

கோட்டைப்பக்கம் நேரடிப்பார்வை

கட்டுரைத் தொடர் நாளை வெளிவரும்

விமானப் படை: பலப்படுத்த அரசாங்கம் தீவிர முயற்சி

கொழும்பு, அக். 18
அரசாங்கம் நவீன ஆயுதங்களை வெளிநாடுகளிலிருந்து வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில், தனது விமானப்படையையும் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

பயிலுநர் விமானமோட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது வர்த்தமானி மூலம் கோரப்பட்டுள்ளன. (இ-6)

2 ஆம் தர அதிபர் பதவிக்கு தெரிவானோர் பட்டியல்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், அக் 18
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இரண்டாம் தர அதிபர்களாகப் பணி புரிவதற்கு 93 பேர்களை கல்விச்சேவை ஆணைக் குழு தெரிவு செய்துள்ளது.

இவர்களது கல்வி விவரக் கோவைகள் பரிசீலனை செய்யப்பட்டு வேண்டிய தகமைகள் இருப்போருக்கு நியமனம் வழங்கப்படும் என்று யாழ், கல்வி பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன:

இரண்டாம் தர அதிபர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் முப்பது பெயர் தற்போதைய பாடசாலை பற்றிய விவரங்கள் நேற்றைய உதயனில் வெளிவந்தன,

பட்டியலின் மிகுதிப் பெயர்களும் அவர்களின் தற்போதைய பாடசாலைகளும் வருமாறு:-

திருமதி வீ தெய்வேந்திரம் [அச்சுவேலி புனிததெரேசா], ஏ பேரம்பலம் [இளவாலை மெய்கண்டான் வித்], எஸ் துரைராஜா [யாழ் குருநாதகலாமி வித்], எஸ் இராஜசேகரம் [மட்டுவில் சந்திரமௌலீச வித்], எஸ். பிரகாசம் வித்), கே. வீரசிங்கம் (சாவகச்சேரி மகளிர் ம. வி), எஸ் தங்கவேல் (இடைக்காடு ம. வி.), ஆர். துரைநாயகம் (கனகரத்தினம் ம. ம. வி.), கே. கதிர்காமசேசர் (மந்துவில் ஸ்ரீ பாரதி வித்), திருமதி என் சிவராசா (மல்லாகம் ம வி.). ரீ. எவ். மனோகரன் (கரணவாய் ம. வி.). வ. வரதராசா (எழுதுமட்டுவாள் கணேச வித்).

எஸ். மகாலிங்கம் (தெல்லிப்பளை மகாஜனா), ஏ. அலக்சாண்டர் (பளை. ம. வி), வீ. சச்சிதானந்தன் (தெல்லிப்பளை யூனியன்). எஸ். அருள்சுப்பிரமணியம் (மாதகல் புனித ஜோசப்பு ம. வி.), சகோ. எம் யுபெமியா (வாழ். புனித ஜேம்ஸ் மகளிர்). பி. ஜே. அந்தோணி (வாழ். மத்திய கல்லூரி), பி. நடராசா (கனகரத்தினம் ம. ம.வி.), ரீ. கருணாகரன், (கொக்குவில் இந்து). பி. மகாலிங்கம் (மானிப்பாய் மெமோரியல் ஆ. பா), எம் சண்முகநந்தரம் (பண்டத்தரிப்பு இந்து).

வீ. கந்தசாமி [வரணி வடஅ. த. க. பா), எஸ் நடராசா [வசாவிளான் ம. ம. வி], எம். வேலாயுதம் [அச்செழு சைவப்பிரகாச வித்). திருமதி ஜே. பொன்னம்பலம் (வாழ். வேம்படி), எஸ். செல்வநாயகம் (தெல்லிப்பளை தந்தை செல்வா), திருமதி சோமளம் அம்பலவாணர் (வட்டுக்கோட்டை இந்து), எஸ் நடராசா (எழுதுமட்டுவாள் சி. சி. ரி. எம். எஸ் பா), ஜ. சின்னையா (கச்சாய் அ. த. க), டெல்வி பாகியலட்சுமி மார் (தண்டு (கோண்டாவில் இந்து) எஸ். ஜெயநீல்வரநாதன் (வேலணை சைவப் பிரகாச).

எஸ். குணவீரசிங்கி (வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்), திருமதி பி. சின்னையா (கொக்குவில் இந்து), பி எஸ். பட்வேட (நில்லாலை றோ. க. த. க.), ஐயாத்துரை துரைராஜா (யாழ். வண்ணை நாவலர் ம. வி.). ஏ ஸ்ரீகாந்தன் (கனகரத்தினம் ஸ்கந்தவரோதயா), திருமதி எஸ். இந்திரராசா (பருத்தித்துறை இந்து மகளிர), ரீ. நாகராசா (வாழ். செங்குந்த இ. க.), ரீ. பஞ்சலிங்கம் (நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா), எம். நாலதமிபரமசிவம் (காரைநகர் யாழ்ரன் கல.), செல்வி அன்னலக்ஷ்மி. கதேதயா (யாழ். இந்து மகளிர்), பீ. சபாரத்தினம் (மண்டைதீவு ம. வி), ஸ் மெய்யலிங்கம் (நுணாவில் ஸ்.த.க. பா.), எஸ் கணேசதாஸான் (நெடுந்தீவு ம வி) [இ-5]

(முற்றும்)

புதிதாக ஒரு குருநகர் நிர்மாணிக்க வேண்டிய அளவுக்கு அது எலும்புக் கூடாய் தேய்ந்து நிற்கிறது!

(11-10-1990ஆம் திகதிய உதயனில் வெளிவந்த கட்டுரையின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.)

குருநகர், நாள் முழுவதும், பகல், இரவு என்று ஓய்வில்லாமல், 24 மணி நேரமும் சனசந்தடி மிக்க இடமாக விளங்கிய ஒரு பகுதியாகும்.

ஏனைய புறநகரப் பகுதிகளுக்கு இல்லாதஇந்தவிசேட அம்சத்தினால் அது ஒரு நகரமாகவே இயங்கியது என்னலாம் எப்போதும்,எவ்வேளையும் மனித சஞ்சாரத்துடன். சனசந்தடியுடன் சுறுசுறுப்பாகவும் அமளியாகவும் இருந்த குருநகர் —

கடந்த 102 நாட்களாக மனித நடமாட்டமே காணப்படாத சூனியப் பிரதேசமாகக் காட்சி அளித்தது. கால்நடைகள் வீடுகளில் பேணுவார் இன்றி ஏதவித்து நிற்கும், நாய்கள் வீடுகளிலும், வீதிகளிலும் நின்று ஊளை இட்டதும் குருநகரை இந்நாட்களில் ஒரு மயான பூமியாகவே ஆக்கி இருந்தது.

விமானக் குண்டு வீச்சுகளால தரை மட்டமான வீடுகளும், அரைகுறையாக உடைந்து காணப்படும் கட்டடங்களும், எரிகுண்டுகளுக்கு இலக்காகி எரிந்து போன உடைமைகளுமாக குருநகர் இன்று குரூரமாகக் காட்சிதருகிறது. வெறும் முறிந்த எலும்புத் தூண்டுளாகத் தெரிகிறது.

அரச படைகளின் அகோரத் தாக்குதலினால இடிபாடுகளுடன் காட்சி அளிக்கும் குருநகர், நில நடுக்கத்தால் சூறாவளியின் சீற்றத்தால் — பாழடைந்த ஒரு நகரின் நிலவுச் சின்னங்களே கண்களில் படுகிறது. அதனைப் பார்ப்பதற்கு குப்பை கூழங்களும், கால்நடைகள், பிராணிகள் மரணித்த துர்நாற்றமும் மூக்குகளில் ஏற, சிறிதே சகித்துக்கொண்டு முன்னேற வேண்டும். முன்னெப்போதும் ஏற்பட்டிராத அளவுக்கு கடந்த 102 நாட்களாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் குருநகரப் பிரதேசத்தில் வீடுகள், கடைகள், சங்கங்கள் அலுவலகங்கள், பாடசாலைகள் தேவாலயங்கள், கலாமன்றங்கள், சனசமூக நிலையங்கள், நூல்நிலையங்கள், என்பன நூற்றுக்கணக்கில் சேதம் அடைந்து. குருநகர் தனது பொழிவை இழந்து வெறிசாக, சோகமாக. சூன்யமாகிக் கிடக்கிறது சேதங்களின் பெறுமதி இதுவரை சரியாகக் கணிப்பீடு நடத்தப்படவில்லை. ஆயினும் அவை பலப்பல கோடி மதிக்கத் தக்கவை என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.

நகரின் கரையோர தரிசனம்

குண்டு வீசி வீழ்த்தப்பட்ட கட்டங்களில் இருந்த பாவனைப் பொருள்கள் அந்தந்த இடங்களிலேயே நாசமாக்கப்பட்டன. அவற்றின்பெறுமதியும் பலகோடி மதிப்பிடத்தக்கது.

இதேவேளை பீதியால் வீடுகளைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து போன பொதுமக்களின் வீடுக் கதவுகள் பாரிய விமானக்குண்டு வீச்சுக்களால் திறந்துகிடந்த சமயங்களிலும், நிறபடாமல் இருந்த கதவுகளை உடைத்தும் பல லட்சக்கணக்கான ரூபா பொருள்கள் களவாடப்பட்டது கவலைக்குரிய அவமானம் தரும் செய்தி.

102 நாட்கள் தொடர்ந்த தாக்குதல்களில் ஒரு காலத்தில் களஞ்சிய அறைகளாக இருந்து பிற்பாடு குடியிருப்பு அறைகளாக மாறிய கிட்டங்கிகள் முழுமையாக சேதம் அடைந்துள்ளன. இவை எதிர்காலத்தில் இருந்த சுவடுகளே இல்லாமல் போக நேர்ந்துள்ளது

ஆலயங்கள் பாடசாலைகள் சேதம்

யாழ்-பேராலயம், குருநகர் யாகப்பர், புதுமை மாதா, உத்தரிய மாதா, சென். செபஸ்தியார், சம்பேதுறுவார், வேளாங்கன்னி கொலை விலக்குமாதா, அடைக்கலமாதா ஆலயங்கள் மிகப்பெரிய அளவில் சேதம் அடைந்துள்ளன.

குருநகர், சென். ஜேம்ஸ் கனிஷ்ட்ட்தியாலயம், புனித சம்பத்திரிசியார் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், பாடசாலைகள், பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலை, கொழும்புத்துறை முதியோர் இல்லம் என்பனவும் நாசமாக்கப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரிகள்

யாழ். போதனா வைத்தியசாலை சேதமானது ஒருபுறமிருக்க, குருநகர் தங்கம்மா ஞாபகார்த்த அரசினர் வைத்திசாலை, பிலிப்ஸ், ஏப்பிரகாம், வேம்படி தனியார் வைத்தியசாலை என்பன சேதம் அடைந்ததால் சேவையாற்ற முடியாமல் இன்னமும் முடங்கிக் கிடக்கின்றன.

குருநகர் நடன இசைக் கல்லூரி, யாழ். திருமறைக் கலாமன்றம், குருநகர் சனசமூக நிலையம், குருநகர் ஐக்கிய முன்னணிக் காரியாலயம், குருநகர் கூட்றொழில் அபிவிருத்திச் சங்கம், ஐஸ் ஆலைகள், றெக்கிளரேஷன் சனசமூக நிலையம், குருநகர் கலை அரங்கு, சீநோர்வலைத் தொழிற்சாலை, யாழ். பெருங்தெருக்கள், நிலைக்களம், திருச்சிலுவை பாவர் கல்வி நிலையம் என்பனவும் விமானக் குண்டு வீச்சினால் உருக்குலைக்கப்பட்டுள்ளன.

[illegible] சிவன்கோவில் [illegible] சேதமாக்கப்பட்டுள்ளது. சின்னக்கடைச்சந்தைப் [illegible] குருநகரின் [illegible] உள்ளது. யாழ் – பிரதான வீதியில் பல நிறுவனங்கள் சுடைக் குண்டுக்கு இலக்காகி பாரிய சேதம் அடைந்துள்ளன

யாழ். தியோகு வீதியில் அமைந்துள்ள மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் ஷெல், விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி உள்ளது.

அரசியல்வாதிகள், அரச உயர் அதிகாரிகள், கல்விமான்கள்,சமூக சேவையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், டாக்டர்கள், நீதித்துறைசார்ந்தவர்கள் என்று குருநகருக்குப் புகழ் தேடிக் கொடுத்தவர்கள். அப்பகுதி மக்களுக்கு மட்டுமல்லாது குடாநாட்டு மக்கள் எல்லோருக்கும் சேவை செய்தவர்கள் ஆகிய பல பிரமுகர்களின் வீடுகளும் தரைமட்டமாகி உள்ளன: இப்போது வெறும் இடிபாடுகளாகக் காட்சிதருகின்றன.

செப்டம்பர் மாத இறுதிப் பகுதியில் மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களால், கடலில் நிலைகொண்டிருந்த பீரங்கிப் படைத் தாக்குதல்களால் குருநகர் தொடர்மாடி மனைகளும் சேதத்திற்கு உள்ளாகின.

பல ஆயிரம் ரூபா செலவில் குருநகர் குத்தகையாளர் சங்கம் புனரமைப்புச் செய்த வேண்டியதேவை ஏற்பட்டுள்ளது அழிவின் சுவடுகள் தெரியாமல் புனர்நிர்மாணம் செய்யப் பெருந்தொகை நிதியும், நிபுணத்துவமும், திட்டமிடலும் தேவை நீண்டகாலமும் தேவைப்படலாம். எப்படியோ குருநகரின் சாம்பல் மேட்டிலிருந்து நவீன நகரம் ஒன்று எழுந்தே ஆக வேண்டும்.

அது மீள நிர்மாணிக்கப்பட்டு முடிவதற்கு முன்னர் மக்கள் அங்கு வாழ்ந்தாகவே ஆகவேண்டும்.

அவர்கள் வாழ்வதற்குப் பல வசதிகள் உடனடியாகத் தேவைப்படும்.

குருநகர்ப் பகுதி மக்களின் குடிதண்ணீர்த் தேவை முக்கியமானது. திருநெல்வேலி, கோண்டாவில் நீர்க்கிணறுகளில் இருந்து மின்சாரம் தடைப்பட்டிருப்பதால் குழாய்களுக்கு நீர்ப்பாய்ச்ச முடியவில்லை.

கடலில் இயந்திரப்படகுகளில் சென்று தொழில் நடாத்த எரிபொருளில்லை. தாக்குதல் நடத்தப்பட்ட காலங்களில் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்சென்றவர்கள் திரும்பவும் வந்து இருக்க வீடுகள் இல்லை. வானத் தாக்குதலின் கோரத் தாண்டவம் அவர்களை நிரந்தரமாக நிர்க்கதிக்கு ஆளாக்கி விட்டது:

கடந்த நான்கு மாதங்களுக்கும் மேலாக தொழில் வாய்ப்பு இல்லாமல் இருந்ததால வீடுகளைத் திருத்த கைகளில் காசில்லை.

வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்த மக்களில் பலர் திரும்பவும் இங்கு வரத் தொடங்கிவிட்ட போதிலும், பாதுகாப்புடனும், நிம்மதியுடனும், வசதிகளுடனும் வாழ வழி பிறக்குமா என்ற கேள்வியே அவர்களின் நெஞ்சங்களில் பதிந்து நிற்கிறது!

[முற்றும்]

தேவி பரமலிங்கம்

மீன்சந்தைப்படுத்தும் வாடியும் உருக்குலைந்து காணப்படுகிறது.

குருநகர் தனது பொலிவை, உருவத்தை, கம்பீரத்தை இழந்து அலங்கோலமாகக் காட்சி தருகிறது. அதன் கோலத்தைப் பார்த்து. அழிவை நினைத்து அப்பகுதி மக்கள் இதயத்திலிருந்து குருதியைச் சொரிகிறார்கள்.

புதியநகர் தேவை

மீண்டும் ஒரு புதிய குருநகர் நிர்மாணிக்கப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

வியாழக்கிழமை 18-10-1990

டிசம்பருக்கு முன் அரச ஊழியர்கள் இளைப்பாறப் பல புதிய சலுகைகள்

போனஸ், உடன் திரட்டிய ஓய்வூதியம்

கொழும்பு, அக். 18

தற்போது சேவையில்உள்ள அரசாங்க ஊழியர்களை இவ் வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இளைப்பாறச் செய்வதற்கு அரசாங்கம் பல ஊக்குவிப்புகளை வழங்க முடிவு செய்துள்ளது.

அதன் பொருட்டு அரசாங்கம் புதிய சலுகைகளை அறிவித்திருக்கிறது.

இது சம்பந்தமாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா செய்த சிபாரிசுகள் இம்மாதம் மூன்றாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டன.

அதன் முழு விவரம் வருமாறு:-

★ இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் அரச சேவையில் இருந்து இளைப்பாறுவோருக்கு, அவர்களின் ஆறு மாத ஓய்வூதியம் போனஸாக வழங்கப்படும்.

★ பத்து வருட சேவையைப் பூர்த்தி செய்த எந்த அரச ஊழியரும் விரும்பினால் ஓய்வு பெறலாம். அவர்களுக்கு திரட்டிய ஓய்வூதியத் தொகை உடனடியாக வழங்கப்படும். எனினும் குறைக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியம் அவர் சேவையில் சேர்ந்த திகதியிலிருந்து 20 வருடங்கள் பூர்த்தியான பின்னரே கிடைக்கும்.

★ இருபது வருடங்கள் சேவையாற்றிய ஊழியர்கள் விரும்பினால் ஓய்வு பெறலாம் இவர்கள் முதலில் திரட்டிய ஓய்வூதியத் தொகையையும் பின்னர் குறைக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதியத்தையும் பெறமுடியும்.

★ முப்பது வருட சேவையுள்ளவர்கள் இளைப்பாறும் பட்சத்தில் முதலில் திரட்டிய ஓய்வூதியத்தையும் பின்னர் முழுமையான மாதாந்த ஓய்வூதியத்தையும் பெற முடியும்.

★ மேற்கண்டவற்றுடன் தற்போது நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டமும் தொடர்ந்து அமுலில் இருக்கும்; அதில் எவ்வித மாற்றமும் இல்லை. பதவி இல்லாமற் செயலப்படும் போது தாமாகவே இளைப்பாறும் முறையும் மாற்றப்படவில்லை.

★ புதிய திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் சகல ஊழியர்களும் தமது சம்பளத்தில் 90 சத விதத்தை ஓய்வூதியமாகப் பெறுவர்.

★ அரசாங்க ஊழியர்கள் 55 வயதில்தான் ஓய்வுபெற வேண்டும் என்ற உத்தரவை மாற்றி அதற்கு முன்னர் விருப்பத்தின் பேரில் இளைப்பாற வசதி செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

★ மேலே கூறப்பட்ட சலுகைளைப் பயன்படுத்தி ஓய்வுபெறுவோர் அரச சேவையில் எக்காரணம் கொண்டும் மீண்டும் சேர்க்கப்படமாட்டார்கள். [அ]

யாழ்-கிளிநொச்சி மாவட்டங்களுக்கு உரம் அனுப்ப அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம், அக். 18

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு உரம் வகைகளை அனுப்ப கூட்டுப் படைத்தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தற்சமயம் நெற்செய்கைக்குரிய பருவகாலம். அதே வேளையில் பல இடங்களில் உப-உணவுப் பயிர் வகைகளும் செய்யப்படுவதுண்டு.

யாழ். மாவட்டத்துக்கு 7,500 தொன் உரவகைகளையும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 7 ஆயிரம் தொன் உரவகைகளையும் உடன் அனுப்பி உதவுமாறு அந்த அந்த மாவட்ட அரச அதிபர்கள் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதுபற்றி உத்தியோகபூர்வமான பதில் எதுவும் அவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை

அதேவேளை — இங்கு அவசரமாகவும் கூடுதலாகவும் தேவைப்படும் யூரியா, வி. எம். ஐ. ரி. டி. எம் போன்றவையே அனுப்ப கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி மறுத்துள்ளதாகவும் — இங்குள்ள மண்ணின் மாதிரியை எடுத்து தற்று உரவகைகளைப் பாவிக்க வசதி செய்யும் வகையில் கொழும்பில் விவசாயத் திணைக்களம் ஆராய்ச்சி மேற் கொண்டுள்ளதாகவும் நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

கொழும்பில் இருந்து வரும் தனியார் லொறிகளில் உரவகைகள் கொண்டுவர முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக லொறி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் இருந்து வரும் லொறிகளில் உரவகைகள் கொண்டு செல்லப்படுகின்றனவா என்பதைக் கண்டுபிடிக்க தடைமுகாம்களில் சோதனைகளும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. (இ-3)

க. பொ. த உயர்தர மாணவர்களுக்கான

அறிவித்தல்

நாட்டின் சுபிட்சத்தை நோக்கிய பாதையில்..... எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.

திரு. வரதராஜன்
திரு. ஜெயராம்
திரு. மரியதாஸ்
திரு. சுப்பிரமணியம்
திரு. வைகுந்தநாதன்
திரு. ஸ்ரனிஸ்லாஸ்
திரு. முருகையா
திரு. நாகநாதன்
திரு. நந்தகுமார்
திரு. செல்வரட்ணம்
திரு. சந்திரமோகன்
திரு. ஐங்கரநேசன்
திருமதி சுப்பிரமணியஐயர்
செல்வி உமா சங்கரி

★ க. பொ. த. உயர்தரம் 92 ஆம் ஆண்டிற்கான கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல்.

18-10-90 (வியாழன்) பிற்பகல் 3 மணி

★ க. பொ. த. உயர்தரம் 90, 91 ஆம் ஆண்டுகளுக்குரிய கலை, வர்த்தக, விஞ்ஞான மாணவர்களுக்கான கலந்துரையாடல்.

19-10-90 (வெள்ளி) பிற்பகல் 3 மணி

அனைவரும் சமுகமளிக்கவும்.

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[சி-5319]

யாழ்ப்பாணக் கல்லூரி
தொழில்நுட்ப நிறுவனம்—வட்டுக்கோட்டை
அகில உலக கெயர்

மரவேலைப் பயிற்சி, கட்டுவேலைப் பயிற்சி

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின் உதவியுடன் மேற்படி இலவச பயிற்சி நெறிகள் 5-11-90 மீண்டும் ஆரம்பமாகின்றன.

★ காலம்:- 2½ மாதங்கள்

★ தகைமை:- 15 வயதும் அதற்குமேற்பட்டோரும்; 8ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்,
தகுதி கண்டு குறைந்த தகைமையும் ஏற்கப்படும்.

ஒழுங்கான பயிலுனர்க்கு:-

1. நாளாந்த ஊக்குவிப்புப்படி ரூபா 30/-
2. பயிற்சி முடிவில் ரூபா 1000/- பெறுமதியான இலவச உபகரணப் பொதி
3. தூர இடத்துப் பயிலுனர்க்கு இலவச உணவு விடுதி வசதிகள்
4. ஆரம்ப பயிற்சியின் பின் 10 மாதங்களுக்கு வேலைத்தலப் பயிற்சி - வேலைக்கேற்ற ஊதியம்
5. பயிற்சி முடிவில்:-
   i. பரீட்சை, வேலை அடிப்படையில், தொழில் நுட்ப நிறுவன தேசிய தரத்திலான (அரசாங்க) சர்வதேச தரத்திலான அகில உலக கெயர் தொழிற் சான்றிதழ்கள்
   ii. சொந்தத்தில் தொழில் முயற்சி தொடங்க விரும்புவோருக்கு வழி வகைகள்.

விண்ணப்பங்கள் தபால் மூலமோ, நேரிலோ 29-10-90 முடிவுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

– பணிப்பாளர்.

[14481]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அரிசி வாங்கச்சென்றவருக்கு பூநகரியில் கத்திக் குத்து!

வியாபாரத்திற்காக அரிசி வாங்க சைக்கிளில் சென்ற இளைஞர் பூநகரிப் பகுதியில் வைத்து கத்தியால் குத்தப்பட்டார். படுகாயமுற்ற நிலையில் மாவிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று அங்கு மரணமானார்.

கட்டைப்பிராயைச் சேர்ந்த வி. சந்திரன் [வயது 20] என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவருடன் ஐந்து வருடங்களுக்கு மேல் நட்புடன் பழகியதாகக் கூறப்படும் மற்றொருவரே இவரைக் கத்தியால் குத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

ஆடு வெட்டியபோது கத்தி கையைப் பதம் பார்த்தது!

யாழ்ப்பாணம், அக். 18

ஆடு வெட்டியபோது கத்தி தவறி சிறுவனின் கையை வெட்டியது.

தீபாவளித் தினமான நேற்று இறைச்சிக்கறி சமைப்பதற்காக ஆட்டை வெட்டியதந்தை, ஆட்டைப்பிடித்துக் கொண்டிருந்த மகனின் கையை தவறுதலாக வெட்டியதாகவும், அதனால் மகன் படுகாயமுற்றதாகவும் தெரிவிக்கப்படடது.

கொக்குவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தம்பிரத்தினம் கமலநாதன் என்ற சிறுவன் காயமடைந்தான். [உ-15]

கட்சித் தலைவர் கூட்டம் செவ்வாய் நடைபெற்றது

கொழும்பு, அக். 18

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவது பற்றி ஆராய ஜனாதிபதி தலைமையில் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் ஒன்று கடந்த செவ்வாய் நடைபெற்றது.

எதிர்க்கடசித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட பல கட்சித் தலைவர்கள் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தக் கூடிய பாதுகாப்பு நிலை நாட்டில் நிலவுகிறதா என்பதை எதிர்வரும் டிசம்பர் மாதம் மீண்டும் கூடி மீளாய்வு செய்வது என்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-எ)

ராணுவம் சென்ற ரயில் குண்டு வைத்துத் தகர்ப்பு

சண்டிகார், அக். 18

பஞ்சாப் மாநிலத்தில் இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்ற ரயில் ஒன்று சிக்கியத் தீவிரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நான்கு ஜவான்கள் உயிரிழந்தனர். இன்னும் பல ஜவான்கள்காயமடைந்தனர்.

தண்டவாளத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததைத் தொடர்ந்து ரயில் எஞ்சினும் ஆறு பெட்டிகளும் தடம்புரண்டு சேதமடைந்தன. [ஒ-எ]

அதிபர்களுக்கு விரைவில் நியமனம்

கொழும்பு, அக். 18

யாழ். மாவட்டத்தில் முதலாம், இரண்டாம் தர அதிபர்களாக பதவிஉயர்வு பெற்றவர்களுக்கு விரைவில நியமனக் கடிதங்களைக் கல்விச் சேவைகள் ஆணைக்குழு அனுப்பி வைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

வெளியூர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழர்கள் பஸ் மூலம் அநுராதபுரம் செல்ல அனுமதி மறுக்கப்படுகிறது.

அவர்கள் பஸ் மூலம் சென்றாலும், 4 மைல் தூரத்தில் உள்ள படைத் தடைமுகாமில் வைத்து, இறக்கப்பட்டு மீண்டும் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்களாம்.

தமிழர்கள் ரயில் மூலம் மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். (ஒ-3)

WANTED

Applications are invited for the post of Secretary.

Applicants should be fluent in English and posses minimum of ten years experience in typing. Stenography will be an added qualification.

Salary is negotiable but not less than 2000/- p. m. with other benefits.

The vacancy is to be filled immediately.

Applications written in own hand writing with full bio-data to be handed over at the Uthayan reception counter. Canvassing in any form will be a disqualification.

Personnel Manager,
New Uthayan Publications [Pvt.] Ltd.,
292/2, Navalar Road,
Jaffna.

மரண அறிவித்தல்கள்

திரு. மயில்வாகனம் மகேந்திரன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய, யாழ்ப்பாணக்கலால் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. மயில்வாகனம் மகேந்திரன் 17-10-90 ஆம் திகதி அன்று காலமானார். இவர் திருமதி மயில்வாகனத்தின் அன்பு மகனும், திருமதி இந்திராதேவியின் அருமைக் கணவரும், ஹரேந்திரா (லண்டன்), நரேந்திரா, சுரேந்திரா (கனடா), ரவிந்திரா ஆகியோரது அன்புத் தகப்பனாரும், திருமதி சரஸ்வதி, திரு. நாகரட்ணம், காலஞ்சென்ற கனகரத்தினம், காலஞ்சென்ற சொக்கநாதன், ஞானாம்பிகை, சிவசுப்பிரமணியம், கனகம்பிகை, மாணிக்கவாசகன், ராஜலட்சுமி, விஜயநாதன், ரட்ணராஜா, ராஜரட்ணம் ஆகியோரது அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஐயாத்துரை, லீலா, பத்மா, மணிவாசகம், மலர், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ஜெயலட்சுமி, ஸ்ரீகாந்தன், அம்பிகை, செல்வராணி, பவுசியா, காலஞ்சென்ற கமலாதேவி, ராதாதேவி, சத்தியபால், மகேசன், ஆகியோரது அன்பு மைத்துனரும், ராஜ்டே, வாசுகியினதும் அன்பு மாமனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது கச்சேரி நல்லூர் 71/2 ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 18-10-90 இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இந்திராதேவியும், பிள்ளைகளும்.

71/2, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (14487)

வினாயகமூர்த்தி மோகனராசன்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி 7 ஆம் கட்டையை வதிவிடமாகவும் கொண்ட அ. வினாயகமூர்த்தி (இ. போ. ச. சோண்டாவில்) அவர்களின் அன்பு மகன் மோகனராசன் 14-10-90 அன்று அகால மரணமானார்.

அன்னாரது ஈமக் கிரியைகள் 14-10-90 அன்றே நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:

அ. வினாயகமூர்த்தி

உடுப்பிட்டி. (14476)

யோ. பிரான்சிஸ்

[மெக்கானிக் - சிறுவிளான்]

சிறுவிளானைச் சேர்ந்த பிரபல மெக்கானிக் யோசவ் பிரான்சிஸ் கொழும்பில் 15-10-1990 திங்கட்கிழமை காலமானார்.

இவர் மேரி திரேசாவின் அன்புக் கணவரும், தவா [பிரான்ஸ்], றூபி [அவுஸ்திரேலியா], செல்வா [லண்டன்], றஜனி, விஜயா [லண்டன்], ஜெயா [லண்டன்], சயந்தி, சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஷேவியின் [அவுஸ்திரேலியா] அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சிறுவிளான், அ. பிரான்சிஸ் ஜெனம்
இணுவில். (14255)

பலாலி---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை அடுத்து கட்டுவன், குரும்பசிட்டி, மயிலிட்டி கிராம நீதிமன்றம் ஆகிய பகுதிகளில் இருந்து பெரும் இழப்புகளுடன் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

மயிலிட்டி, கட்டுவன் வீதியில் தாம் ஏற்கனவே அமைத்திருந்த சென்றிகளில் இருந்தும் படையினர் பின்வாங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை—

வயாவிளான் சந்தியூடாக வெளியேற முயன்ற படையினருடன் நேற்று மாலை வரை விடுதலைப் புலிகள் கடும் மோதல் புரிந்து கொண்டிருந்தனர்.

விமானக் குண்டு வீச்சுகளு, ஷெல் குண்டு வெடிப்பு, ஹெலிக்கொப்டர்களின் கலிபர் தாக்குதல்கள் ஆகியவற்றினால் வயாவிளான் நேற்று மாலை வரை அதிர்ந்த வண்ணம் இருந்தது. (உ-3-5-68)

புகையை---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கட்டுவன் பகுதிகளில் வீசிய இரண்டு அவ்ரோ விமானங்கள் மீண்டும் பிற்பகல் 3.30 மணியளவில் வயாவிளான் பகுதியில் வந்து குண்டுகளை வீசின.

அருகருகே பறந்தவாறு குண்டு வீசிக்கொண்டிருந்த இரு விமானங்களில் ஒன்று திடீரென புகையைக் கக்கியபடி பறந்து மறைந்தது. அதைத் தொடர்ந்து மற்ற அவ்ரோ விமானம் குண்டு வீச்சை நிறுத்திவிட்டுச் சென்றது.

மீண்டும் மாலை ஐந்து மணியளவில் [illegible] மட்டும் இப்பகுதிக்கு வந்து குண்டுகளை [illegible] (உ-3-5-68)

JAFFNA ENGLISH ACADEMY

Toefl, Esol (London)
E. B. C (London), Spoken English
A/L English ஆகிய புதிய, பழைய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன

நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

9, Rakka Lane,
Chundikuli, Jaffna.

[C-5317]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org